முருகப்பெருமான் துணை

**மகான் சூரியபகவான் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

18.04.2023, செவ்வாய்கிழமை

1. ஞானத்தலைவன் அவதாரமே
ஞானியாக வந்த அரங்கனே
தானத் தரும வழி முறைகளே
தரணிக்குப் பாதுகாப்பு என அருளும்
2. அருளும் ஓங்கார நாயகனே
அப்பனே பஞ்சபாண்டவர்களை தொடர்ந்து
அருளுவோம் நவகிரக நாயகர்களும்
அரங்கனுக்கு அனுகூல ஆசிதனை தருவோம்
3. தருகவே சோபகிருது தகர் திங்கள்
தக்கபடி பஞ்ச திகதி குசன் வாரம்
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 5 ம் நாள், 18.04.2023 செவ்வாய்கிழமை)
சூரிய பகவானும் அனுகூல ஆசி
செகமெல்லாம் உயிர்பாதுகாப்புற உரைப்பேன்
4. உரைக்கவே சக உயிர்களை
உயர்வாக எண்ணி மனிதன் வாழ
குறைவின்றி எவ்வுயிரையும் மதித்து
குவலயத்தில் சமத்துவ நிலை காண வேணும்
5. வேண்டாம் உயிர்கொலை புரிதல்
வேண்டி சன்மார்க்கம் தன்னை
உண்டாக்கி தொண்டுடன் கூடிய
உயர்மார்க்கமாக அரங்கமகான் அருளிவர
6. வருவதை அறிந்து உணர்ந்து
வணங்கி தொண்டு செய்து
குருவே என சரணாகதியை
குடிலாம் பிரணவன் வாழும் சபையை
7. சபையை நோக்கிக் கொண்டிட
சார்ந்திடும் உயர் குணங்கள்
அபயமென மேலவர் துணைபட
ஆறுமுகனார் அருளும் கண்டு தேறுவர்

8. தேறவே தரும வேலியிட்டு
தேசமெல்லாம் காக்கும் ஞானி
ஆறுமுக அரங்கன் தருமத்தை
அனுகி உதவி தருமபலம் பெற

**9. பெறுவதுடன் கதிர்வாரம்தோறும்**
**பிசகில்லா அரங்கன் குடிலுக்கு**
**வருவதுடன் ஆசி தீட்சை பெற**
**வரமாக அரங்கன் கரம்பட**

**10. கரம்பட சூரியபகவான் என்**
**கருணைமிக்க ஆசி கிட்டியே**
**வரமாக உயர்பணி சிறப்பு**
**வருவாய் மேம்பட்டு பதவி யோகம்**

11. யோகமுடன் அரச ஆதாயம்
உயர்வான ஆரோக்கியம்பட
வகையான ஞானமும் கூடிசிறப்பர்
வழங்கிய அனுகூல ஆசி முற்றே

–சுபம்–

ஒவ்வொரு ஞாயிறு தோறும் துறையூர் ஓங்காரக்குடிலிற்கு வருகைதந்து குடில் ஆசான் அரங்க மகா தேசிகரிடம் தீட்சை உபதேசம் பெற்று வர அவர்களது வாழ்வில் எல்லா நலமும் வளமும் பெறலாம் என்பது மகான் சூரிய பகவானின் அருள் வாக்காகும்.